# அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்

## 2026 முதல்நிலைத் தேர்வு பயிற்சி

### விடுதி அறை ஒதுக்கீடு (ம) காப்புத் தொகை செலுத்துதலுக்கான அறிவிப்பு

அறிவிக்கை எண்:அ/1020/2025-1 நாள்: 26.09.2025

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் மற்றும் நான் முதல்வன் போட்டித்தேர்வு பிரிவுடன் இணைந்து நடத்தப்பட்ட 2026-ஆம் ஆண்டுக்கான ஒன்றிய தேர்வாணைய குடிமைப்பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு பயிற்சிக்கான பொது நுழைவுத் தேர்வில் பங்கு பெற்றவர்களின் முழுமையான மதிப்பெண் பட்டியல், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (www.civilservicecoaching.com) வெளியிடப்பட்டது. மதிப்பெண் பட்டியலில் இடம்பெற்ற ஆர்வலர்களில் விண்ணப்பித்த ஆர்வலர்களின் தரவரிசை மற்றும் இட ஒதுக்கீட்டு விதிகளின்படி கலந்தாய்வு (ம) சான்றிதழ் சரிபார்ப்பு (22.09.2025, 23.09.2025, 24.09.2025) நடைபெற்றது.

கலந்தாய்வின் போது மூல ஆவணங்கள் சரிப்பார்க்கப்பட்டு (Certificate Verification) தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Allotment Order) வழங்கப்பட்டது. கலந்தாய்வில் ஆர்வலர்கள் தங்களது விருப்ப மையங்களை தெரிவு செய்தனர். மேலும், 29.09.2025 (ம) 30.09.2025 ஆகிய நாட்களில் விடுதி அறை ஒதுக்கீடு செய்யப்படும் என முந்தைய அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது. **தற்போது பொதுப் பணித் துறை கட்டிட பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதால் காப்புத்தொகை செலுத்துதல் (ம) விடுதி அறை ஒதுக்கீடு நாட்கள் கீழ்க்காணுமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

**காப்புத்தொகை**

- சென்னை (முழு நேரம்/பகுதி நேரம்) மையத்தினை தேர்வு செய்த ஆர்வலர்கள் 06.10.2025 அன்று அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் "காஞ்சி" பசுமைவழிச்சாலை, சென்னை-28-ல் நேரில் ஆஜராகி ரூ.3,000/- காப்புத்தொகை (Mode of Payment: Cash/UPI) செலுத்த வேண்டும்.
- மதுரை (ம) கோயம்புத்தூர் (முழு நேரம்) மையங்களை தேர்வு செய்த ஆர்வலர்கள் காப்புத்தொகை செலுத்த வேண்டியதில்லை.

**விடுதி அறை ஒதுக்கீடு**

- சென்னை (முழு நேரம்) மையத்தினை தேர்வு செய்த ஆர்வலர்களுக்கு 06.10.2025 அன்று அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் "காஞ்சி" பசுமைவழிச்சாலை, சென்னை–28–ல் விடுதி அறை ஒதுக்கீடு செய்து தரப்படும். எனவே, மேற்படி நாளில் தவறாது ஆஜராக வேண்டும்.
- மதுரை (ம) கோயம்புத்தூர் (முழு நேரம்) மையங்களை தேர்வு செய்த ஆர்வலர்களுக்கு 06.10.2025 அன்று தொடர்புடைய மையங்களில் விடுதி அறை ஒதுக்கீடு செய்து தரப்படும். எனவே, மேற்படி நாளில் **மதுரை (ம) கோயம்புத்தூர் மையங்களில்** தவறாது ஆஜராக வேண்டும்.

**வகுப்புகள் துவங்கும் நாள்:** 07.10.2025

எனவே, ஆர்வலர்கள் தாங்கள் தேர்வு செய்த மையங்களில், தற்காலிக சேர்க்கை ஆணையுடன் (Provisional Allotment Order) 06.10.2025 அன்று தவறாது நேரில் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மின்னஞ்சல், தொலைபேசி மற்றும் இதர வழிகளில் விடுதி அறை ஒதுக்கீடு செய்யப்படும் நாட்களை மாற்றம் செய்ய கோரி வரும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

26/9/25

முதல்வர்

26/9/25